RESEARCH ARTICLE

IOR PRESS

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt224s1938

OPEN ACCESS

# ஐம்பெருங்காப்பியங்களில் கலைகள் கூறும் அறங்கள்

**ர. ஜெயந்தி [அ, *], இரா. மல்லிகா [அ]**

[அ] தமிழ்த்துறை, பாரதியார் பல்கலைக்கழக முதுகலை பட்ட மேற்படிப்பு விரிவாக்க மற்றும் ஆராய்ச்சி மையம், பெருந்துறை, ஈரோடு - 638052, தமிழ்நாடு, இந்தியா

# Virtues that the arts express in Aimperum Kaapiyankal (The Five Epics)

**R. Jayanthi [a, *], R. Mallika [a]**

[a] Department of Tamil, Bharathiar University Postgraduate Extension and Research Centre, Perundurai, Erode-638052, Tamil Nadu, India

* Corresponding Author:
jayanthir387@gmail.com

Received: 12-08-2022
Revised: 30-09-2022
Accepted: 08-10-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

Among the aspects of life that are in harmony with the nature that surrounds man, it is the arts and the elements of art that delight the mind, support and delight in being happy, and are greatly desired. In the knowledge mixed with the consciousness inculcated by nature, with the aim of examining everything, some are complex, counterintuitive, and can create contradictions in life. To beautify all of this, to make them aesthetic, to be aware, and to develop positive thinking, the elements of the art form the basis for developing positive thinking, and the ethical ideas contained in it are actionable. Without ethical considerations, literature would be of no use. Even if literature is created with the aim of a work of art, the messages contained in them should be alive and contain good moral ideas. In ancient times, virtues and morals were established by preserving the arts from perishing. People in society were afraid of untrue events. The arts created such fear. The purpose of this article is to examine the virtues of the arts in Aimperum Kaapiyankal, the five great epics.

**Keywords:** Five Epics, Virtues, Knowledge, Literature

## முன்னுரை

மனிதர்களின் நுட்பமான தன்மைகள் மற்றும் திறமைகளை உள்ளடக்கியதாகக் காணப்படுவது கலைகளாகும். கலைகளானது நுட்பத் திறனுடன் கற்பனை வளமும் கலந்து நிகழ்வுகளைப் புனைந்து காட்சிப்படுத்துதல் ஆகும். கலை நயமானது ஆடல்கள், பாடல்கள் மற்றும் கைவினைப் பொருட்களின் மூலம் நுட்பத்துடன் உள்ளெழுச்சித் திறனை ஊக்குவித்து வெளிப்படுத்துவது கலைகளாகும். கலைகள் என்பது வாழ்வியலை மையமிட்டுப் படைக்கப்படுவதால் அனைத்துக் கலைகளும் வாழ்வியற் கலையின் பகுதிகளை நிலையாகக் கொண்டுள்ளது. எழுத்துக்கலைகள், பேச்சுக் கலைகள், நிகழ்த்துக் கலைகள், நிகழ்த்தாக் கலைகள், பயனுறுக் கலைகள் என்ற அனைத்திலும் கருப்பொருளாக அமைந்திடுவது 'அறம் உணர்த்துதல்' ஆகும். அறம் உணர்த்தும் கூறுகளை உடைய கலைகளை மெய்யியல் கலைகள் என்றும் கூறுகின்றனர். காட்சிப்படுத்தி அறத்தினை விவரித்தல் மற்றும் மனக்கண்ணால் படித்து உணர்ந்துக் கொள்ளும் முறைமை என இரண்டிலும் அறம் மட்டும் தான் வலியுறுத்தப்படுகின்றது. சமூக ஒற்றுமை, உலக அமைதி, வாழ்க்கைக்கானப் புரிதல், நீதியை நிலைநாட்டுதல், பண்பு நலனில் உயர்ந்தோர் போற்றப்படுதல், தீவினையாளர்களின் நடுக்கம், கற்பினது மேன்மை, என்றனைத்து அறக்கூறுகளையும் கலைகளின் வாயிலாக ஐம்பெருங்காப்பியங்கள் உணர்த்தியுள்ளன. அக்கலைகளில் அறமானது சிறப்புற நிலை நிறுத்தப்பட்டுள்ளது. அத்தகைய அறங்கள்

குறித்த செய்திகளைக் காப்பிய இலக்கியங்கள் வழி ஆராய்ந்துரைப்பது இக்கட்டுரையின் முதன்மை நோக்கமாகும்.

## கலைகள் - விளக்கம்

மனித இனத்தின் பொழுதுபோக்கு மற்றும் ஆக்கத் திறனின் வெளிப்பாடாக இடம்பெறுவது கலைகளாகும். இக்கலைகளானது இருபெரும் பிரிவுகளில் அடக்கப்படுகின்றது. அவை, 1. நிகழ்த்துக் கலைகள், 2 நிகழ்த்தாக் கலைகள் என்பவைகளாகும்.

அழகியல் நோக்கத்துடன் எண்ணங்கள் மற்றும் உணர்ச்சிகள் இரண்டையும் பிறருக்கு விளக்கும் நோக்கத்துடன் அழகியல் அமைப்புக் கூறுகளுடன் உருவாக்கப்படுவது கலைகள் ஆகும். இக்காலத்தில் கலைகளில் பல்வேறு வகைப்பட்ட உள்ளீட்டுப் பிரிவுகள் சேர்க்கப்பட்டுள்ளன. 1. அறிவியல், 2. வேளாண்மை, 3. பொறியியல் போன்றவற்றை துறை சார்ந்த நுண்கலைகளாகவும், பயன்பாட்டுக் கலைகளாகவும் வகைப்படுத்தியுள்ளனர்.

## நிகழ்த்துக் கலைகளில்

1. ஆடற் கலைகள் - நடன கலைகள், 2. பாடற்கலைகள் - இசைக்கலைகள், 3. கூத்துக்கலைகள் - ஆடல் மற்றும் பாடல் கலந்தது, 4. ஒளிப்படவியல், 5. திரைப்படக்கலைகள், 6. பேச்சுக்கலை, 7. எழுத்துக்கலை, 8. வாழ்வியற்கலை ஆகியன இடம்பெறுகின்றன

## நிகழ்த்தாக் கலைகளில்

1. கட்டிடக் கலைகள், 2. சிற்பக் கலைகள், 3. ஓவியக் கலைகள், 4. கவிதை கலைகள், 5. வரைக் கலைகள் போன்றவைகள் நிகழ்த்தாக் கலைகளில் இடம்பெறுகின்றன

## கலை வரலாற்றின் தொடக்கம்

கலை வரலாறு என்பது மேலை நாட்டினர் பலராலும் குறிக்கப்பெறுவது. ஐரோப்பிய மக்களின் கலை வரலாற்றினைப் பற்றியதாகும். ஆனால் கலைகள் என்பது கற்கால மனித வரலாற்றிலேயே இடம்பெறத் தொடங்கியுள்ளதுடன் உலக நாகரீக வளர்ச்சிக்கு அடித்தளமிட்டதாக இக்கலைகள் காணப்படுகின்றது. கற்கால மனிதர்களின் அறிவு வளர்ச்சியின் வெளிப்பாடாக வெளிப்பட்ட கலை வடிவம் ஓவியக்கலையாகும். ஓவியத்தின் மூலம் செய்திகளையும், குறியீட்டினையும், புலனுணர்வுக்குத் தகவலாக அனுப்பியுள்ளனர்.

1. மக்கள் தொடர்பு, 2. பொழுதுபோக்கு, 3. மாறுபட்ட அரசியல், 4. மனநலம், 6. ரசனை வெளிப்பாடு இவற்றின் முக்கிய காரணமாக கலை நோக்கச் செயற்பாடுகள் கற்பனைக் கலந்தும் நிகழ்வியல் மூலமும் வளர்க்கப்பட்டு உள்ளன.

## ஐம்பெருங்காப்பியங்களில் கலைகள் கூறும் அறங்கள்

காப்பிய இலக்கியங்களில் வாழ்வியல் அறம், சமூகவியல் அறம், இல்லறம், இலக்கிய அறம், கற்பு நெறி என்ற அனைத்தையும் இலக்கியத்தில் பாடுமிடத்து, மனித வாழ்வியலுக்கு சிறப்புமிக்க பொருள் தருவதாய் அமைந்துவிடுகிறது. எதிர்கால சந்ததியினருக்கு இதுபோன்ற அறத்துடன் கூடிய வாழ்வியலையும் படைப்புகளையும் தருமிடத்து இவ்வுலகத்தை நேரான வழியில் வழிநடத்திச் செல்லுதற்கு துணைபுரிய முடியும். அத்தகைய ஆற்றல் மிக்க செயல்பாட்டை காப்பிய இலக்கியத்தின்

அறக்கருத்துக்கள் செய்து வருகின்றன. நீதி கூறுமிடத்து முறைதவறிடக் கூடாது என்பதை சிலம்பும், பசிப்பிணி போக்குதலினால் மட்டுமே உலக உயிர்களை உய்விக்க முடியும்

என மணிமேகலையும், நிலையாமை இவ்வுலகில் நிலைத்தது என்பதனை சீவகசிந்தாமணியும், அறமும், பொருளும் முழுமுதற் பொருளாவன இன்பத்தின் நாட்டம் கெடுதலில் முடியும் என்ற முடிவினைத் தரக்கூடியதாக வளையாபதியும், குண்டலகேசியும் இடம்பெற்றுள்ளதைக் காணமுடிகின்றது. காப்பிய இலக்கியங்களில் கலைகள் கூறும் அறங்கள் இன்றைய சமூகத்தினர் மட்டுமின்றி எதிர்கால சமூகத்தினர்க்கும் பயன் விளைவிப்பதாய் அமைகின்றது.

அறம் என்பது பல்வேறுபட்ட உண்மை நிகழ்வுகள் மற்றும் வாழ்வியல் சூழ்நிலைகளுடன், கருணை மரபு, கற்பு நிலைபாடுகள் நேர்மை மாறாத பண்புடைமை என்ற அனைத்தையும் உள்ளடக்கிய ஒற்றை திருவுடைய சொல் ஆகும். இவ் அறமென்னும் மந்திரச் சொல்லில் உண்மை, நேர்மை, கடமை, அன்பு, பண்பு, இல்வாழ்வு, கற்புநெறி, இரக்கம். கருணை போன்ற பல்வேறு கூறுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அத்தகைய அறக்கூறுளை ஐம்பெருங்காப்பியங்களான, சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி, கலைகளின் மூலமும் பயன்பாட்டுக் கலைகள் மற்றும் அறிவுசார் கலைகளின் மூலமும் சிறப்புற வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

## சிலப்பதிகாரம் - கலைக்கூறுகள்

அரச குடும்பத்தில் பிறந்த இளங்கோவடிகளால் இயற்றபட்ட சிலப்பதிகாரத்தின் முதன்மை நோக்கம் அறம் வலியுறுத்தல் ஆகும். அறம் வலியுறுத்த நினைத்த துறவியார் இயற்கலை, இசைக்கலை, நாட்டியக்கலை மூன்றையும் திறனுடன் சிலம்பில் வெளிப்படுத்தியுள்ளதன் மூலம் அவருடைய கலையுள்ளத்தையும், கலைக்கூறுகளையும் நம்மால் அறியமுடிகின்றது. இதனை "காப்பியத்தில் வருணனைகளையும், உணர்ச்சிகளையும், இணை இணையாகவும், முரணாகவும், நயமுற அமைத்துள்ள அமைப்பும் அவருடைய கலையுள்ளத்தைத் தெளிவாக விளக்குகின்றது" என்கிறார் (Varatharasan, 1995). இதனைப் போன்று தான் கலைகளும், கலைக்கூறுகளும் ஆகும்

## ஆடற்கலையும் சமூக அறமும்

கூத்தானது இருவகைப்படுவதாகும். அகக்கூத்து, புறக்கூத்து. சிலப்பதிகாரத்தில் ஆடலாசிரியன் ஒருவனால் ஆடல், பாடல், தாளம் மூன்றும் ஒத்து இயங்குமாறு பிணையல், எழிற்கை, தொழிற்கை, பிண்டி இவற்றின் திறம் உணர்த்திட்டவாறு கற்பிக்கப்படுகின்றது. அத்தகைய சிறந்ததொரு ஆடற்கலைகளை கற்றறிந்தவளாக மாதவி காணப்படுகிறாள். இதனை,

"வாரஞ் செய்தகை கூடையிற் களைதலும்

பிண்டி செய்தகை ஆலிற் களைதலும்

ஆடல் செய்தகை பிண்டியிற் களைதலும்

குரவையும் வரியும் விரவில செலுத்தி"

ஆடுவதற்குத் தயாரானவளாகவும், ஆடற்கலையில் சிறப்புற்றவளாகவும் திகழ்கிறாள். மாதவி. இதனைப்போன்று, உலக வாழ்வைத் துறந்து, ஆடற்கலையை மறந்து வாழ்ந்திட்ட மாதவி, கோவலனின் இறப்பிற்குப் பின்னர் துறவு வாழ்க்கையை மேற்கொண்டு வாழ்ந்து வந்ததுடன் தனது மகளை மற்றவர்களின் பசிப்பிணியைப் போக்கிடும் அறச்செல்வியாக வளர்த்தெடுக்கின்றாள் (Silamboli chellappan, 1998).

கலைச்செல்வியின் வாரிசாக இருந்திட்ட தவச்செல்வியான மணிமேகலை மண்ணையும், மனிதர்களையும் பிற உயிர்களையும் நேசித்திடும் பரிவு உள்ளத்தினை உடையவளாக இருப்பதுடன் பிற துன்பங்களையும் போக்கிடுகின்றாள்.

“மனந்தூயார்க் கெச்சம்நன் றாகும் இனந்தூயார்க்கு

இல்லைநன் றாகா வினை"

என்ற வள்ளுவ பெருந்தகையின் வாக்கிற்கிணங்க மனம் தூய்மை உடையவளாக, மண்ணுயிர்க்கு எல்லாம் ஆக்கத்தினைத் தரக்கூடியவளாக மணிமேகலை வாழ்ந்துள்ளதைக் காண முடிகின்றது (Silamboli chellappan, 1998). மேலும்,

'விழவு மலிமூதூர் வீதியும் மன்றமும்

பழமணல் மாற்றுமின் புதுமணல், பரப்புமின்"

நிறைந்த புகார்தனில் விழாக்கோலம் பூண்ட வீதிகளும், மன்றங்களும் காணப்படுவதுடன் (Silamboli chellappan, 1998),

“பட்டிமண்டபத்து பாங்கு அறிந்து ஏறுமீன்

பற்றா மாக்கள் தம்முடன் ஆயினும்

செற்றமும் கலாமும் செய்யாது அகலுமின்"

குளிர்ந்த மணலின் மீது போடப்பட்ட பந்தலின் கீழ் அமர்ந்து சமயவாதிகள் உள்ளிட்டோர் வாதிட்டு பட்டிமண்டபத்தின் மூலம் பேச்சுக்கலையை வளர்த்திடும் பான்மையை மணிமேகலை சிறப்புறக் காட்டுகின்றது (Silamboli chellappan, 1998).

## கலையும் - நம்பிக்கையும்

வளைவணனுக்கும் வாசமயிலை என்பவளுக்குப் பிறந்தவளான பீலிவளை என்பவளுடன் கூடிய சோழ மன்னன் அவளை தேடியலைந்துவிடத்து, மணிமேகலையின் வாயிலாக உண்மையை அறிகிறான் நாக நாட்டினைச் சேர்ந்த பூங்கொடியானவள் திரும்பி வருவதற்கில்லை. மாறாக தங்களுக்கும் அவளுக்கும் பிறந்த புதல்வன் தான் வருவான் என்பதையறிந்த மன்னன் இந்திர விழாக் கொண்டாடுவதை மறந்து விடுகின்றான் அப்போது,

“தீவக சாந்தி விழாவை நீ செய்யாவிட்டால் நினது காவல் நகரம் கடலிடை மூழ்கும்! மணிமேகலை வாயிலாக இந்த உண்மை வெளிவந்தது. அவ்வாறு விழாச் செய்யாததால் இந்திரன் சாபமும் உளது. அதனால் அது தணிதலும் இல்லை. மேலும், இந்நகரம் அழியாப் போவதும் இந்த அரசு கேடுறதலும் நிகழும்" (Silamboli chellappan, 1998).

என்ற உரைவளத்தின் மூலம் விழாக்களும், பழமை மாறாத அறசெயல்களும் காலந்தோறும் மறந்திடாமல், மரபு மாறாமல் பாரம்பரிய பண்பு நலன்களுடன் கடைபிடித்தல் வேண்டும் என்ற சமூக அறத்தை மணிமேகலை முன்வைக்கிறது. பழமை மாறி புதிய நாகரீகம் என்ற பெயரில் பண்பாட்டுக் கலாச்சார சீரழிவுகள் ஏற்படுவதையும் நம்மால் பார்க்க முடிகிறது. இதனை,

“காசுஇல் மாநகர் கடல்வயிறு புகாமல்

வாசவன் விழாக் கோள் மறவேல் - என்று

மாதவன் போயின அந்நாள் தொட்டும் இக்

காவல் மாநகர் ஒழியாதால்”

என்கிறார் சீத்தலைச் சாத்தனார் (Silamboli chellappan, 1998).

கலைகளின் மூலம் கதைகளும், சமூக, பண்பாட்டு, கலாச்சார மரபுகளும் அழிந்து போகாமல் தடுக்கப்பட்டு வளர்க்கப்பட்டு வருவதற்கும் அறம் காக்கப்படுவதற்கும் உறுதுணையாக அமைவதை காணமுடிகின்றது.

'கதைகள் வரலாறாகக் கூடும் ஆனால் வரலாறுகள் கதைகளாகி விட்டால், பிறகு உண்மை நிகழ்ச்சிகள் பல உருத் தெரியாமல் போய்விடும். தமிழிலக்கியத்தின் தொன்மையும், தூய்மையும் மிக்க வரலாறுகள் தொடர்பற்றுப் போனதற்குக் காரணமே முறையாக வரைந்த வரலாறு இல்லாமல் போனதுதான். வரலாறு இல்லை வாழ்ந்த இடமும் காலமும் இன்னமும் சரியாகத் தெரியவில்லை" என்ற கூற்றானது வரலாற்றிற்கு மட்டுமின்றி கலைகளுக்கும் பொருந்தக்கூடியதாகும். கலைகளும், கலைகள் உரைக்கும் சமூகவியல் அறங்களும், பண்டைய காலத்தில் வளர்ந்தும், தற்காலத்தில் அழியக்கூடிய விளிம்பு நிலையில் உள்ளதையும் பார்க்கமுடிகின்றது (Thiruthakka Devar, 2020).

## நேர்மையும் அறமும்

சீவகசிந்தாமணியில் சீவகன் காந்தருவதத்தையோடு மகிழ்ந்திருந்த இளவேனிற் காலத்தில், சுரமஞ்சரியும், குணமாலையும் தயாரித்த சுண்ணப்பொடிகளில் யாருடையது சிறந்தது? என்று அறிய முயற்சிக்குமிடத்து சீவகன் குணமாலையின் சுண்ணப்பொடியே சிறந்தது என்ற உண்மையை உரைக்கின்றான்.

அக்காலதில் சுண்ணப்பொடி தயாரித்தல் என்பது மிகப்பெரிய கலையாக பின்பற்றப்பட்டு வந்துள்ளது. அதனைதான் இக்காலத்தில் ஹோலிப்பண்டிகையாக மக்கள் கொண்டாடி வருகின்றனர். சீவகன் அறத்தின் வழிப்பட்டவனாக பொய்மை கலக்காமல் தமது முடிவினைக் கூறுகின்றான். நீதியையும், தர்மத்தையும் தரும் அறம் சார்ந்த முடிவுதனில் மனமானது விருப்பு, வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு உண்மையையும், உழைப்பையும் மட்டுமே கருத்தில் கொண்டு நீதி மட்டுமே வழங்கப்படுதல் வேண்டும் என்ற சிறந்த அறக்கருத்தினை சீவகனிடத்து சுரமஞ்சரியின் தோழியான கனகபாதகை முன்வைப்பதை,

“கண்ணில் மாந்தருங் கண்ணிமை யார்களும்

எண்ணி ல்நின்சொ லிகந்தறி வாரிலை

நண்ணு தீஞ்சொ ல்நவின்றபுள் ளாதியா

அண்ண ல்நீக்கினஃ தொட்டுவல் யானென்றாள்”

“ஒருவர் மேல் அன்பு கொண்டால் அவர் செய்த தீமையும் நல்லவையாகும். அவ்வாறின்றி அன்பு மாறிப் பகை உண்டான காலத்து அவர் செய்யும் நல்லவையும் தீமையுடையாதாகும்" (Thiruthakka Devar, 2020).

என்ற எதார்த்த வாழ்வியலின் நிலைப்பாட்டினையும், உண்மையையும் அறத்தின் வழிப்பட்டதாக எடுத்துரைக்கின்றது சீவகசிந்தாமணி. மேலும்,

பெண்களை நுகர்வதில் பெரு விருப்பம் கொண்ட சீவகனின் செயற்பாடுகள் அறவழிப்பட்டதாயினும், பல இடங்களில் அறத்திற்கான எல்லையும், வரையறையும் தளர்வுப்பட்டுத்தப்பட்டுள்ளது. அறத்திற்கு முரணானதாக எண்ண வைக்கின்றது.

அன்பு என்றுமே மாறாததாகவும், இவ்வுலகில் வாழும் உயிர்கள் அனைத்திற்கும் பொதுவானதாகவும் அமைந்துள்ளது. அத்தகைய அன்பின் தகைமையானது அறத்தின் பல்வேறுபட்ட கூறுகளில் ஒன்றாகும்.

“ஈதலில் குறைகாட்டாது அறன் அறிந்து ஒழுகிய”

அன்பும் பண்பும் உண்மையுடையதாகவும், பொய்ம்மைக் கலக்காமலும் அமைந்திருப்பது சிறந்த அறமாகும். சீவகன் கேமசரியின் அன்பினை ஏற்று, அழகினை ஆராதித்து போற்றிப்பாடி புகழந்துரைத்து, புணர்ந்தபின்பு, அவர் புலம்பும்படி விட்டுச் செல்கின்ற முரணானது, இவ்வுலக வாழ்வினில் நிலையாமை தத்துவத்தை எடுத்துரைப்பதாய் அமைந்துள்ளது (Balasubramanian, 2004). மேலும்,

“அளைவது காமம் மடுநறபு

நெய்யொழுகு மூனும் பின்னா

விளைவது தீவினையே கண்டீ

ரிவைமூன்றும் விடுமினென்றால்"

துய்க்கின்ற காமம், துன்புறுத்தும் கள், நெய்யொழுகும் மாமிசம் இம்மூன்றாலும் விளைவது தீமையே என்ற அறச்சிந்தனையை முன்வைப்பதுடன் (Thiruthakka Devar, 2020),

“பொய்யே பொருளுரையாம் முன்னே

கொடுத்துண்டால் புரிமின் கண்டீர்"

இறக்கும் தருவாயில் தான் நினைத்ததைப் பேச முடியாத ஒருவன், தன்னுடைய செல்வத்தைப் பற்றிய செய்தியை குறிப்பாகக் கூற விழையுமிடத்து, அவனுடைய மனைவி குறுக்கிட்டு பொய்யுரைத்து கூறவந்ததை மறுத்து மொழிவதுடன், ஈட்டிய செல்வத்தைப் பிறருக்குப் பயனுறாத வகையில் வாழ்ந்திடும் செயற்பாடானது பெண் வழிச் சேறல் மற்றும் பொருள் துன்பத்தை விளைவிப்பதுடன், நன்றியுணர்வுடன் வாழ்தலே சிறந்த அறம் என்பதையும் எடுத்துரைக்கின்றது (Thiruthakka Devar, 2020).

## வளையாபதியும் - அறமும்

புகார் நகரத்தை மையமிட்ட கதைப்பகுதியாக வளையாபதி அமைகின்றது. வைசிய மரபினைச் சார்ந்த நவகோடி நாராயணன் இரு பெண்களை மணந்திட்டவன். முதல் மனைவி வைசிய குலத்தையும், இரண்டாவது மனைவி வலையர் குலத்தையும் சார்ந்தவள் என்பதால் பின்பு தள்ளி வைப்பதையும், அவ்விரண்டாம் மனைவிக்கு ஒரு மகன் பிறப்பதால் அவனை வளையாபதி என்றும் அழைக்கப்படுகின்றான்.

## தந்தையின் அறமற்ற செயல்

காதல் கலையில் சிறந்து விளங்கிய நவகோடி நாராயணன், வளையாபதியினையும், அவனது தாயையும் முதலில் எற்றுக்கொள்ள மறுக்கின்றான். காளிதேவியின் அருளாலும், கற்பின் திறத்தாலும், அறத்தினை வழிபட்டவளாக தமது மெய்ம்மையை நிரூபிக்கின்றாள். இதனை,

“நாடும் ஊரும் நனிபுகழ்ந்து ஏத்தலும்

பீடுறும் மழை பெய்க எனப் பெய்தலும்

கூடல் அற்றவர் நல்லது கூறுங்கால்

பாடுசால்மிகு பத்தினிக்கு ஆவதே"

என்ற உண்மையை மெய்ப்பிக்கின்றாள் (Puliyur Kesigan, 2010). மேலும்,

அறத்துடன் தொடர்புள்ள செய்திகள் படிமக் காட்சிகளாக வளையாபதியில் இடம்பெற்றுள்ளன”, என்று கூறுகிறார் (Avvai Duraisami Pillai, 2000).

தமிழர்கள் இயற்கையைப் பாடியும், வாழ்வியலின் நடைமுறை இயல்பைப் பற்றி எடுத்துக்கூறியும் அறம் சார்ந்த கொள்களைகள் மற்றும் கோட்பாடுகளைச் சமுதாயத்தில் நிலவிடச் செய்வதற்குரிய சமூகவியல் அறத்தை மிகவும் விரும்பியதுடன் மட்டுமின்றி நிலை நிறுத்தவும் எத்தணித்து உள்ளனர். அத்தகைய சமூகவியல் அறங்களால் மட்டும் தான் மக்கள் நிம்மதியையும், மகிழ்ச்சியினையும் பெறமுடியும் என்பதை முழுவதுமாக நம்பியுள்ளனர். இதனை,

"மடவ மன்ற தடவுநிலைக் கொன்றை

கல்பிறங்கு அத்தம் சென்றோர் கூறிய

பருவம் வாரா அளவை நெரிதாக

கொம்புசேர் கொடி இணர் வாழ்த்த

வம்ப மாரியைக் கார் என மதித்தே"

கொடைத்தன்மைக்கு மிகச் சிறந்த எடுத்துக் காட்டு மழையாகும் (Avvai Duraisami Pillai, 2000). அத்தகைய மழையே இங்கு வம்ப மாரி என்று பொருள்கொள்ளப்படுகின்றது. முன் பெய்துவிட்டு வைத்திருந்த எஞ்சிய நீரை மேகங்கள் முன்கூட்டியே மழையாகப் பொழிகின்றது என்ற தோழியின் கூற்று பொய்ம்மையானதாக இருப்பினும் கார்காலத்தில் வருகிறேன் என்று கூறி சென்ற தலைவன் வராததினால், தலைவியின் மனமானது வருந்துகின்றது என்ற அன்பின் வருத்தத்தைப் போக்க ஒரு பொய்ம்மையானது மெய்ம்மையாகக் காட்டப்படுகின்றது. ஆனால், வளையாபதியில் உண்மையை நிலைநிறுத்துவதற்குப் போராடிப் பின்பு அறன் வழிப்பட்ட வெற்றியைக் காண்கின்றாள்.

“பொறையிலா அறிவு போகப் புணர்விலாஇளமை மேவத்

துறையிலா வசனவாவி, துகில் இலாக் கோலத் தூய்மை

நறையிலா மாலை, கல்வி நலமிலாப் புலமை நன்னீர்

சிறையிலா நகரம் போலும் சேயிலாச் செல்வ மன்றே”

அறவழிப்பட்ட வாழ்க்கைச் சிறப்பானது இம்மைக்கும், மறுமைக்கும் பயன்தரக்கூடியது என்னுமிடத்து, அதனை மட்டுமே வாழ்க்கையில் கடைபிடித்தல் வேண்டும் (Jayarani tamilpriyan, 2011). மகவு இல்லாதவனுடைய செல்வம், பொறுமையில்லாதவனின் அறிவு, புணர்ச்சியில்லாத இளமை, பொறுமையில்லாத குணம், ஆடையில்லாத ஒப்பனை, வாசனையில்லாத மாலை, நூல் கல்வியில்லாத புலமை, நீர்நிலை இல்லாத நகரம் இவையனைத்துமே பயன்றறது என்ற உண்மையை வளையாபதி முன்வைப்பதுடன் இயற்கை அறிவுடன் ஒருவற்கு நூலறிவு சேர்ந்தால் தான் மிக்கப் பயனுடையதாக மாறும் என்பதை,

“கல்லாதான் ஒட்பம் கழியநன்று ஆயிடினும்

கொள்ளார் அறிவுடை யார்"

வள்ளுவரின் மேலானச் சிந்தனையையும் விளக்குகின்றது (Jayarani tamilpriyan, 2011). மேலும், மக்களுக்குச் செய்கின்ற அறங்களும், உயிர்களிடத்துக் காட்டுகின்ற அருள் தன்மையும், வஞ்சனையில்லாத மனமும், அறங்களின் சிறந்த உறுதிப் பொருள்களாக விளங்கக் கூடியனவாகும். இதனை,

“ஆற்றுமின் அருள் ஆருயிர் மாட்டெல்லாம்

தூற்றுமின் அறம்தோம் நனி துன்னன்மின்

மாற்றுமின் கழிமாயமும் மானமும்

போற்றுமின் பொருளாஇவை கொண்டுநீர்”

என்று அறத்தின் செம்மையை வாழ்வியற் கலையின் மூலம் விளக்குகின்றது (Puliyur Kesigan, 2010). வாழ்வியற் என்பது கலைவடிவம் பெறுகின்ற போது, உண்மையும், அன்பும், கற்பும், நேர்மையும், கருணையும், இரக்கமும் கொண்டு வாழ்த்திடுமிடத்து அருள் நிறைந்த வாழ்க்கையாக அவை மாற்றம் பெறுகின்றன. அத்தகைய அருள் நிறைந்த வாழ்வியலுக்குரிய உண்மைகளை எதார்த்தவியல் நோக்கோடு வளையாபதி முன்வைக்கின்றது. இதனையே வள்ளுவர்,

“அருள்சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை இருள்சேர்ந்த

இன்னா உலகம் புகல்” (Jayarani tamilpriyan, 2011)

“அருளிலார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளிலார்க்கு

இவ்வுலகம் இல்லாகி யாங்கு"

என்பதிலிருந்து இவ்வுலகின் சிறந்த அறத்தின் உறுதிப் பொருட்களில் அருட்தன்மையானது சிறப்பிடம் பெறுகின்றது (Jayarani tamilpriyan, 2011). இவ்வருட் தன்மையினைத்தான் மணிமேகலை,

"மண்திணி ஞாலத்து வாழ்வோர்க்கு எல்லாம்

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"

என்பது இங்கு நினைவுக்கூறத்தக்கதாகும் (Silamboli chellappan, 1998). வாழ்வியலைக் கலையாகவும், தன்னம்பிக்கையை இதயத் துடிப்பாகவும், அறன் வழிப்பட்ட வாழ்க்கையை செம்மாந்தப் பொருளாகவும் கொண்டுள்ளதுடன், மனிதப் பிறப்பியலை சமமாக்கி, வேற்றுமைகளையும் சாதியத்தையும் நீக்கிட முயற்சித்த மிகப்பெரிய அறவாழ்வியல் நூலாக வளையாபதி காணப்படுகின்றது.

## குண்டலகேசியும் - முழுமுதற் பொருளும்

வாழ்வியல் கலையின் மகத்துவத்தை உணர்த்துவதில் குண்டலகேசியானது சிறப்பிடம் பெறுகின்றது. இவ்வுலக வாழ்க்கையானது இன்பங்களும், துன்பங்களும் இரண்டறக் கலந்து காணப்படுவதுடன் நல்வினைகளும், தீவினைகளும் இணைந்திட்ட செயற்களை உள்ளடக்கியதாகவும் அமைந்துள்ளது. எண்ணங்கள் உயர்வுடையதாக அமையும் இடத்து வாழ்க்கையும் உயர்வுடையதாகின்றது. பொய் பேசுதல், புறங்கூறுதல், கடுஞ்சொல் பேசுதல், பயனில்லாத சொற்களைப் பேசுதல் போன்ற இவைகளை நீக்கிவிட்டு பேசும் இடத்து சொற்கள் பொருள் நிறைந்ததாகவும், இனிமையுடையதாகவும், சிறந்த வாழ்வியலுக்குரிய அடையாளமாகவும், அறம் நிறைந்ததாகவும் எடுத்துரைக்கப்படுகின்றது.

'மனது உயர்ந்தவர்க்கே இன்பமுள வாகும்' என்பது மனத்தூய்மை என்பதாகும். இதனை நாதகுத்தனார்,

“வாயுவினை நோக்கியுள மாண்டவய நாவாய்

ஆயுவினை நோக்கியுள வாழ்க்கையது வேபோல்

தீயவினை நோக்குமியல் சிந்தனை மில்லாத்

தூயவினை நோக்கியுள துப்புரவு மெல்லாம்"

என்கிறார் (Puliyur Kesigan, 2010). மனம் மேம்பட்டதாகவும், எண்ணங்கள் உயர்வுடையதாகவும் அமையுமிடத்து செயற்பாடுகள் சீர்மையுடையதாகின்றது. இதனை,

“புலனடக்கமே மெய்யான தவம். இன்பமும், புகழும் மனத்தூய்மையும் உடையவர்க்கே உரியன: அவாவினை நுகர்ந்து அழிக்கலம் என்பது எரியும் தீயினை நெய்யினால் அவிக்கலாம் என்பதனோடு ஒக்கும்" என்கிறார் (Puliyur Kesigan, 2010). சந்திரன். குண்டலகேசி மெய்யுணர்வு பெற்று வீடுபேறு அடைதல் என்பது மட்டுமே நிலையானது என்று வலியுறுத்துகின்றது. ஒழுக்கமானது உண்மைத் தவமாகவும், 'மனமது செம்மை - வாழ்வினது உயர்வு' என்றும், யாக்கை அழிவிற்குரியது நிலையற்றது என்றும், இவ்வுடலின் மூலம் நிலையற்ற வாழ்வியலைக் கொண்டுள்ள நாம் நிலையுடையதாக என்னும் அறியாமைக் குறித்தும் பல அறச்செயல்களை முன் வைக்கின்றது.

“பாளையாம் தன்மை செத்தும் பாலானாம் தன்மை செத்தும்

காளையாம் தன்மை பெற்றும் காமுறு இளமை செத்தும்

மீளும் இவ்வியல்பு மின்னே மேல்வரு மூப்பும் ஆகி

நாளும் நாள் சாகின்றாமல் நமக்கு நாம் அழாதது என்னோ?"

என்று ஒவ்வொரு பருவத்தைக் கடந்து அடுத்த பருவத்திற்குள் மாறுமிடத்து முன்னர் இருந்த பருவம் செத்து ஒழிகின்றது என்பதுடன் இவ்வாறு பல பருவங்களைக் கடந்து வாழ்கின்ற நாம் ஒவ்வொரு பருவ இறப்புக்கும், அழாமல் பிறரின் இறப்புக்கு வருந்தி அழுகின்றோம் என்பது வாழ்வியலின் எதார்த்தத்தையும், நிலையாமையையும் எடுத்துரைப்பதாய் அமைகின்றது (Puliyur Kesigan, 2010). இதனை,

"பிரிந்தவர்க்கு இறங்கி பேதுற்று

அமுதநம் கண்ணின் நீர்கள்

சொரிந்தவை தொகுத்து நோக்கின்

தொடுகடல் வெள்ளம் ஆற்றா

முரிந்தநம் பிறவி மேனாள்

முற்றிழை இன்னும் நோக்காய்

பரிந்து அழுவதற்குப் பாவா

யடியிட்ட வாறு கண்டாய்"

என்ற பாடலடிகள் நிலையாமை தத்துவத்தை எடுத்துரைக்கக் கூடியதாகும். உயிர்களின் தன்மையானது பிறப்பதும், இறப்பதும் ஆகும். பிறப்பிற்கும், இறப்பிற்கும் இடைப்பட்ட சிறிய காலம் எனில் ஒருவருக்கொருவர் அன்பும், பரிவும் காட்டியும் மனித நேயம் பாராட்டிடுதல் மிகச் சிறப்புடையது என்ற சிறந்த தருமத்தையும், நீதியையும் வலியுறுத்துகின்றது (Thiruthakka Devar, 2020).

## முடிவுரை

காப்பிய இலக்கியங்களில் கலைகள் கூறும் அறங்களானது பண்டைத் தமிழர்களின் மாண்பிற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைகின்றது. பெண்ணுக்குப் பெருமையையும், மண்ணிற்கு மகத்துவத்தையும் தரக்கூடியதாகச் சிலப்பதிகாரத்தின் கலைகள் உள்ளதுடன் அறவழிப் பட்ட செயல்பாடுகளும் அமைந்துள்ளன. நீதிக்கும், நேர்மைக்கும் அழிவு வருமிடத்து அதனை நிலைநாட்டிட துடிக்கும் விவேகமிக்க வீரத்தினைச் சிலப்பதிகாரத்தில் காணமுடிகின்றது. உணவினது சிறப்பு, பசியற்றச் சமூகம், தனிமனித வாழ்வியலின் மேம்பாடு, கற்பு ஒழுக்கம், தவம் இவற்றின் அறவழிப்பட்ட செயற்பாடுகளையும், கலைக்கூறுகளையும், மனித நேயமிக்க வாழ்வியலையும், பிற உயிர்களின் மீதான இரக்கம், கருணை உள்ளத்தையும், அறவழிப்படுத்துதல் என்ற மேன்மையினையும் உயர்வுப் பொருந்த எடுத்துரைக்கின்றது மணிமேகலை. வாழ்வியல் கலைக்கூறுகள் நிறைந்திட்ட சீவகசிந்தாமணியில் ஆராய்ந்து அறியும் இயல்பு, பெரும் துன்பத்தைத் தரும் பெண்ணிய ஆசை, காலம் வரும் வரை காத்திருந்து பகைமையை வெல்லுதல், அனைத்து உயிர்களிடத்து அன்பு காட்டுதல் என்ற அறவழிப்பட்ட வாழ்வியல் கலைக்கூறுகளைச் சிறப்புடன் சீவகசிந்தாமணியில் பார்க்க முடிகின்றது. வளையாபதியும் மனித நேயத்துடன் வாழ்கின்ற மனிதர்களையும் தேவைக்கு ஏற்ப வாழப் பழகிடும் சுய நலமிக்க மனிதர்களையும் அடையாளப்படுத்தி, பின்னர் வாழ்வியலின் இன்ப துன்ப எல்லைகளையும், சாதியம் அற்ற சமூக மேன்மையையும், பாவ புண்ணிய நிலைப்பாடுகளையும், அறத்தின் கூறுகளாக எடுத்துரைக்கின்றது. குண்டலகேசி கலைக்கூறுகளின் முதன்மை நோக்கம் நிலையாமைத் தத்துவத்தை எடுத்துரைப்பதுடன், தனக்குரிய கணவனைத் தேர்ந்தெடுக்குமிடத்து, அவன் பண்பு நலன்களில் சிறந்தவனாகவும், ஒழுக்க மேன்மை உடையவனாக இருக்கின்றான் என்பதை அறிவதற்கும் வழிவகுக்கின்றது. அறக்கூறுகள் நிறைந்ததாகவும், சமூகவியல், உளவியல் நடத்தையில் நிகழ்வுகள் என்ற அனைத்திலும் சமூக அறத்துடன் கூடிய கலைக்கூறுகளைக் கொண்டதாய் ஐம்பெருங்காப்பியங்கள் இடம்பெற்றுள்ளன.

## References


Avvai Duraisami Pillai, S. (2000) Kurunthogai moolamum uraiyum, Aruna Publications, Chennai, India.

Balasubramanian, K.V. (2004) Kalithogai, New Century Book House, Chennai, India.

Jayarani tamilpriyan, (2011) Thirukkural thelivurai, classic publications, Kanchipuram, Chennai, India.

Puliyur Kesigan, (2010) Valayapathi Kundalakesi (Moolamum Uraiyum), Saradha Pathippagam, Chennai, India.

Silamboli chellappan, (1998) Manimegalai mollamum uraiyum, Bharathi pathippagam, Chennai, India.

Thiruthakka Devar, (2020) Seevaka Sinthamani Mulamum Uraium, Saradha Pathippagam, Chennai, India.

Varatharasan, M. (1955) Tamil Ilakkiya Varalaru, Pari Nilaiyam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.


**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License